Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.743/2022

**Depositions of PW- 2**

| Name | திரு.வெள்ளைத்துரை | Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
|---|---|---|---|
| Father's name | பழனிச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of June 2026.

01.06.2026

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மகாராஜபுரம் கிராமத்தில்கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் வாழைக்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது கடந்த 07.12.2016 அன்று மம்சாபுரம் காவல்நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று மேற்படி கடிதத்தில் வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள மண் அள்ளப்பட்டுள்ள இடம் அரசுக்கு சொந்தமானதா என்று கேட்டார்கள். நான் சம்பவயிடத்தை பார்வையிட்டு சர்வே எண்.502 மற்றும் சர்வே எண்.503 ஆகிய இடங்கள் கிராம கணக்கில் ஒட்டன்குளம் கண்மாய் அரசு புறம்போக்கு என்று உள்ளது என்று 09.12.2016 அன்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய சான்று அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலீசார்என்னிடம் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் இவ்வழக்கானது மண் சம்மந்தப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்களா அல்லது மணல் சம்மந்தப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்களா என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. வாழைக்குளம் கண்மாய் வேறு ஒட்டன்குளம் கண்மாய் வேறு என்றால் சரிதான். மேற்படி 2 கண்மாய் பகுதிகளிலும் வண்டல் மண் தான் இருக்கும் என்றால் சரிதான்.

பொதுவாக வண்டல் மண் விவசாய நிலங்களுக்கு பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். மேற்படி நான் குறிப்பிட்டுள்ள இரண்டு சர்வே எண்களும் வாழைக்குளம் கண்மாயில் அமைந்திருந்ததா அல்லது ஒட்டன்குளம் கண்மாயில் அமைந்திருந்ததா என்றால் மேற்படி 2 சர்வே எண்களும் ஒட்டன்குளம் கண்மாயில் தான் அமைந்திருந்தது. மேற்படி இடத்தில் எந்த அளவிற்கு எவ்வளவு மண் அள்ளினார்கள் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 சர்வே எண்களும் வாழைக்குளம் கண்மாய் பகுதியில் இல்லை. ஒட்டன்குளம் கண்மாயில் தான் இருந்தது.

மேற்படி பகுதியில் மண் அள்ளப்படுவது சம்மந்தமாக கண்காணிக்க போயி எங்களுக்கு எங்களது மேல் அதிகாரியிடமிருந்து சுற்றறிக்கை எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக வேண்டுகோள் கடிதம் பெற்ற பின்னர் அதுபற்றி எனது மேல் அதிகாரிகளிடம் தெரிவித்தோமா என்றால் அதுபற்றி தெரிவித்துள்ளோம். மேற்படி 2 கண்மாய் பகுதிகளிலும் செம்மண் இருந்ததா என்றால் செம்மண் இருந்தவாறு எனக்கு எதுவும் தென்படவில்லை. மேற்படி மண் அள்ளப்பட்டதாக கூறப்படும் இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் அவ்வாறு சென்றிருந்தால்மேற்படி இடத்தில் எவ்வளவு மண் எவ்வாறு அள்ளப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் அவ்வாறு செல்லாததால் தான் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி அறிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மேற்படி நான் குறிப்பிட்டுள்ள புல எண்.502, 9 ஏக்கர்களை கொண்டது என்றாலும் புல எண்.503, 23 ஏக்கர்களை கொண்டது என்றாலும் சரிதான். மேற்படி சர்வே எண்களில் குறிப்பிட்டு எந்த இடத்தில் மண் அள்ளினார்கள் என்பது பற்றி எனது அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக மேற்படி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எந்த வகையான மண் அள்ளப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் பல வருடங்கள் ஆனதால் தற்போது எனக்குஅதுபற்றி நியாபகமில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.